

உ

# ஆனந்தாஸ்ரமத்தில், ஸந்தான குழந்தை ஸந்நிதித் ஆனந்தாவும்! ஓர் பைத்திய பரதேசி பாபாவும்!



பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா

உ

# ஆனந்தாஸ்ரமத்தில்,


ஸத்தானா குழந்தை ஸந்நித்
ஆனந்தாவும்!
ஓர் வைத்திய பரதேஸி பாபாவும்!

# பொருளடக்கம்

1. ஆனந்த ஆஸ்ரமத்தில் ஸத்தான குழந்தை
ஸத் ஸித் ஆனந்தாவும், ஓர் பைத்திய பரதேச பாபாவும்

எல்லாம் நீ!


आ नं दा श्र म



(ஸத்தியவாக்கை) 1

ஸத்தியம் பேசு.

தர்மம் செய்.

நாவை அடக்கு.

கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசிடுவீர், தர்மம் நிலைவசம்!"

"ஸ்ரீஸத்குரு திருவடி துணை!" "நம்பினர் கெடுவதில்லை!"

"தெய்வம் மனுஷ்யாணம்!" "யத் பாவம் தத் பவதி!"

"ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெய ராம், ஓம்!"

"ஹரேராம்! ஹரேராம்! ராம்ராம்! ஹரே ஹரே!"

"ஹரே கிருஷ்ண! ஹரே கிருஷ்ண!

கிருஷ்ண! கிருஷ்ண! ஹரே ஹரே!"

"அகம் பிரம்மம், ஜெகம் பிரம்மம், அகமே எல்லாம்!"

"ஜெகம், பரமம், ஜீவர்களும், சிறிதும் இல்லை!"

"இறைகுரு நாமமே! ஜீவன் முக்தியின் திறவுகோல்"

" " " ஆத்ம பக்தியின் அஸ்திவாரம்"

" " " " ஜீவ மோக்கத்தின் படிக்கட்டு தானாகும்!"



உ

இதை புத்தி பூர்வமாக பார்த்தால், சந்தேகம் களங்கம், கலக்கம், பயம் தோன்றும்.

அறிவு பூர்வமாக உணர்ந்தால், உண்மை, ஸ்பஷ்டமாக வெளிப்படும். ஆனந்தம் உண்டாகும்.

அன்பும்! அறிவும்! பக்தியும்! பண்பும்! பணிவும்! கனிவும்! கருணையும்! ஓர்மையும்! நயமும்! ஸ்ரீஸத்குருவின் வாக்கிய சிரத்தையும் கொண்ட ஆனந்தாஸ்ரம ஆனந்த அனைத்து குழந்தைகளும்! நம்முடைய! பரம பூஜ்ய பாபாஜீயின்! கருணை கடாக்ஷத்திறைவும்; எம் ஞானக்குழந்தை ஸத் ஸித் ஆனந்தாவின் ஸௌஹார்த்யத்தின் மஹிமையினையும், எல்லா நலமும் பெற, வாழ்த்தி ஆசீர்வதிக்கிறோம்.



ஓ நீங்கள் ராம் ஓ
நாமாவை மட்டும்,
தேடி கண்டு உணருங்கள்
அதன் பொருள்!
உங்களை தேடி வரும்.
என்றோர்களே எம் ஸ்ரீ பாபாஜியும்! ஸ்ரீ மாதாஜியும்!
அதை ஏற்றுக் கொண்டு, உங்கள் பாதம் பணிகிறோம்.

உங்கள் பரம குருவாயும்! ஸத் குருவாயும்!
அமைந்த பரம்பூஜ்யஸ்ரீ பப்பா!
& மாதாஜியின்! ஸத்தியவாக்கானது:
ஸ்ரீராம் நாமா மட்டும், இடைவிடாது, தைவதாரை
வேல், ஸ்மரணை பண்ணிக் கொண்டிருந்தால் போதும்.
தீர்த்தம்! மூர்த்தி! ஸ்தலம்! என்றும்; அந்த
யதி & அதிதி (பிராமண சந்நியாசி துறவிகள்)
ஸ்ரீமஹான்களை, தேடி அலைய வேண்டாம் என்றும்;
அவர்களே உங்களை! தேடி வருவார்கள்
என்றும்; அப்படி தேடி வருபவர்களுக்கு நிஷ்காம்யமாக
சேவை! செய்தால், போதும் என்றும்;
காம்யமாக செய்தால் வேலை என்றும், நிஷ்காம்யமாக செய்தால் சேவை
என்றும் பொருள்படும்.



ஸ்ரீ ஸத் ஸித் ஆனந்த் ஜீ (ஃ)
கடும் தவ அவஸ்
தையை, எப்படி சகித்தார்
என்பதை, **நடித்து**
காட்டி வைத்தான், அவர்
அன்பர்களும், பொறுமையை/கடைப்பிடிப்பர்
என வாழ்ந்து காட்டினார். (எம் ஞானப் புதல்வன்)

உங்கள் **சாதனையின்** (விளக்கமனம்.)

நீங்கள் கண்டு; **பசு** முக்தியோ! **பர** முக்தியோ.

இயல்பாக, எவ்வித முயற்சியும், இல்லாமல், சாத்தியமாகும்

என, அருளியபடி, இந்த **விடைவரை!**

அனுபவித்து வருவதை, இந்த ஏழை உதவாக்கரை,

பரதேசி பைத்தியம், பார்த்தும்/அனுபவித்தும்!

ஸ்ரீ பப்பா ராமாதாஜியின்

வருகிறது. இவ் வாசகங்களை, மனதால் காணமுடியாது.

அறிவால் (தான்) உணரலாம்.

உங்கள் அன்னவரின், நம்பிக்கையின், வைராக்கியத்திற்கு

**தலைவணங்கி!** பணிகிறது, இந்த ஏழை.

வியாபாரமற்ற ஸ்ரீ ராம நாமா! உருக்கத்தின் ஸ்ரீ ராம நாமா!

வலிமையுள்ள **எளிமையின்** ஸ்ரீ ராம நாமா!



பரம் பூஜிய ஸ்ரீ
பப்பா சுமாரநாதீ! (5)
ஸத் ஸித் ஆனந்தா!
இம் மூவரும்,
அவதார
புருஷர்களே! இது ஸத்தியம்.

உந்தன் தூலங்களைப் போல், அவர்கள் தூலங்களையும் எண்ண வேண்டாம்
தொடரும்.

ஆனந்தாஸ்ரமம் ஒன்றில் தான்!
காண முடிகிறது. கேட்க முடிகிறது.
ஓர் உண்மை!
உங்களுடைய ஸ்வாமிஜியாயும்!
எம்முடைய ஞானக் குழந்தையாயும்!
அமைந்த ஸ்ரீ ஸத் ஸித் ஆனந்தா!
தூலம் எடுத்த பிராரப்த கர்மா, சுமார் மூன்று
ஆண்டுகளுக்கு முன்பே முடிந்து விட்டது.
மெய் அன்பர்களின், பிரார்த்தனைக்கு இணங்கி,
இது கால பரியந்தம், அந்த உடல்



அவர்களும் உங்க
ளைப் போலவே, 6
மனுஷதாஸ
அவஸ்தையை உங்க
ளுக்கு கொட்டினால்,
நான், அவர்கள் போதனையை
சாதனையாக்கும் போது நீங்கள் நம்ப முடியும்.
இல்லையானால், நம்பிக்கை வராது.
முடிந்தது.

மெய்யன்பர்களுக்கு, தரிசனத்திற்
,, சேவைக் காகவும்
காகவும்!
வைக்கப்பட்டிருந்ததென, ஸத்தியமாய் உணரவும்.

மேலும், ஸ்ரீ பப்பாஜியோ? ஸ்ரீ மாதாஜியோ?
இந்த ஸ்ரீ ஸத் ஸித் ஆனந்த ஜியோ? பைத்திய
நிலையில், பிரமாணமாக சொல்கிறேன்.

அவர்கள் வந்ததும் இல்லை!
,, மறைந்ததும் இல்லை!
,, நித்திய, ஸத்தியமாய்!
இருப்பை! மட்டும், உடையவர்களென அறிக.



இந்த ரகஸ்யங்களை மனம்!
புத்தி! சித்தத்தை! (7)
உடைய, புத்திசாலிகள்!
உணரவும், அறியவும்,
முடியாது. இது ஸத்தியம்.
புத்தி ஹீனர்களாகிய,

அறிவாளியே

உணரவும்! அறியவும்! முடியும்.
இங்கு நம்பிக்கையே! அனுபவம்! அனுபவன்! ஆகும்.

அவர்கள், ஜீவ அழிப்புக்காக (மனோநாசத்திற்காக
வந்தவர்களாகும்.)

ஸ்ரீபகவான், ஜீவ ரக்ஷிப்புக்காக வந்தவனாகும்.
(பரம்பூஜ்ய ஸ்ரீ பரமஹம்ஸ … ! ஸத் ஸித் ஆனந்தா ஜீ)

அவர்களின், ஸத்தியவாக்கை!

நம்புகிறவர்கள் → அனுபவ ரூபம் அவனும் & அதுவும்
(ஸ்ரீபகவானும்) (பரமும்)

ஆகமுடியுமென்பது. ஸத்தியம்! ஸத்தியம்!! ஸத்தியம்!!!


ஒரு குடிகாரன் / மற்றோர்
குடிகாரனை / அறிவான்! உணர்வான்!!
ஞானியோர் அறியார்! உணரார்!!

இருப்பது ஒன்றே!
நடப்பது நவமே!!

பாபா.

எல்லாம் ஒன்றே! அது யாவுமே! யாவுமே அது! அது நீங்களே! இது ஸத்தியம்





ஸத்திய வாக்கு (1)

ஸத்தியம் பேசு.

தர்மம் செய்.

நாவை அடக்கு.

கருணையோடு இரு.

பிரணவத்தின் மேல் உள்ள வாசகம் மிகவும் முக்கியம்.

"ஸத்தியம் பேசினால் தர்மம் நிலை பெறும்!"

"ஸத்குரு திருவடி துணை!" "நம்பினோர் கெடுவதில்லை!"

தெய்வம் மனுஷ்யாணாம்! "யத் பாவம் தத் பவதி!"

"ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெயராம்," ஓம்!

"அகம் பிரம்மம், ஜெகம் பிரம்மம், அகமே எல்லாம்!"

"ஜெகம், பரமும், ஜீவர்களும், சிறிதும் இல்லை!"

# ஆனந்தாஸ்ரமம்!!!

ஸத்தான ஸத் சித் ஆனந்தாவும்!
சுத்தமான ஓர் ஏழை வைத்தியமும்!!

ஓம் ஆனந்தாஸ்ரமத்தின், ஆனந்தமான குழந்தைகளே! உங்கள் ஸ்வாமிஜியான, ஸ்ரீ ஸத் சித் ஆனந்தாவும்! ஓர் ஏழை வைத்தியமும் தவந்து, அனுபவித்த, சிவ ரகஸ்ய உரையாடல்களை, கீழே தருகிறோம். கருத்தால் உணர்க.




பரம் பூஜ்ய ஸ்ரீ பப்பாவின் வாசகம் :- பணிவே பாதையாக கொண்டால், அங்கு எந்த தடையும் இருக்காது! இருக்கவியலாது. எதுவும் விட்டுக் கொடுக்கிற நாமும் மற்றும் விலகினால், சிரமங்கள் மறையும்.

(2)

திருஅண்ணாமலையில்!

ஓர் சமயம் அவன் ஆகிய, எமது ஐயன் திருடன் (கண்ணன்) கருணையினால், இந்த ஏழை பைத்தியம்! ஸ்ரீ அண்ணாமலை ஸ்வாமிகளின்! இடமாகிய, நல்லவன் பாளையத்தில் உள்ள, "ஸ்ரீ அண்ணாமலை ரமண குடிரம்" என்ற இடத்தில், சுமார் நாலரை ஆண்டுகள்! தங்கி இருந்தது. அது சமயம், ஸ்ரீ அண்ணாமலை ஸ்வாமிகளின், அணுக்கத் தொண்டனை, சுந்தரம் என்பவன் இந்த ஏழையையும், சில அன்பர்களையும், அழைத்துக் கொண்டு, நம்முடைய, ஆனந்தாஸ்ரமம் அழைத்து வந்தான். அதிகாலை, ஆனந்தாஸ்ரமம் வந்தோம் அனைவரும். எங்களுக்கென தனியே கொடுக்கப்பட்ட அறையில், தங்கி ஓய்வு எடுத்தோம். காலை சுமார், ஏழு மணி அளவில், ஸ்ரீ ஸ்வாமிஜீ அவர்கள்! எங்களை காண வந்தார்கள்.




ஸ்ரீ பப்பாஜீயும்! ஓ
ஸ்ரீமாதாஜீயும்!
இணைந்து உரைக்கது:—
ஆத்திரம்! அவசரம்!
வேகம்! படபடப்பு!
உன்னை ஆட்படுத்தும்
போது, பொறுமையும்
நிதானமும் வேண்டும்.

இவ்விரண்டும் இறை! குரு! கருணையால்,
(நம்பிக்கையால்) பெறமுடியும்.

குறிப்பு:— உங்கள் ஸ்வாமிஜீயும்! எம் ஞானக்
குழந்தையான! ஸ்ரீஸத் ஸித் ஆனந்தா! இந்த
ஏழையின், தூல வடிவத்தை, அன்றுதான் முதன்
முதலாக காண்கிறான்.
இந்த ஏழையான, வைத்தியமோ, பலகால தொடர்பின்
அனுபவ நெருக்கம் உண்டு. (இது பரம ரகஸ்யம்)
வந்த ஸ்வாமிஜீ! அந்த ஏழை வைத்தியத்தின்,
திருவடிகளில், மண்டியிட்டு வணங்கினார்.
அவ்வைத்தியம்! "நாராயண" என சொல்லி வாழ்த்தியது.
அன்று ஸ்ரீ ஸ்வாமிஜீ அவர்கள்! "மௌனவிரதம்" போலும்
ஆனால்? ஸ்ரீ ஸ்வாமிஜீ ~~அவர்கள் பேசினார்கள்~~.

ஸ்ரீ ஸ்வாமிஜீ:— ஸ்வாமிகள் நலம் தானே?
வைத்தியம்:— எல்லாம் நலமே!
ஸ்ரீ ஸ்வாமிஜீ:— ஸ்வாமி! பிரயாணம் சௌகர்யமாக
இருந்ததா? உங்களுக்கு கொடுக்கப்பட்ட இடம்,
சௌகர்யமாக இருந்தா? சிரமங்கள் ஏதும் இல்லையே!
வைத்தியம்:— ஸ்வாமிகளே! எந்தகுறையும் இல்லை.
எல்லாம் அவன் கிருபையே!



ஸ்ரீ பப்பாஜியின் (4)
உருக்கமான
ஓர் வாசகம் :- காமம்
என்னும் மோஹம், உன்னை
ஆட்படுத்தி தடுமாற
வைக்கும் போது,
ஹரே ராம்! ஹரே ராம்!!
என அவரு வாயாக. அவஸ்யம்
ரக்ஷிக்கப்படுவாய். நாவக்கிரமத்தில், அசுவே
உன்னை நாசத்தில் சேர்க்கும். இது ஸத்தியம்!

ஸ்ரீ ஸ்வாமி ஜீ:- எங்கள் பேச்சு, மலையாளம் கலந்த, தமிழாக இருப்பதால், தெளிவில்லாமல் இருக்கலாம். உங்களால், புரிந்து கொள்ளமுடிகிறதா?

பைத்தியம்:- (சிரித்துக் கொண்டே) மலையாளம் என்றுவே (மலை = மேடு / ஆழம் = பள்ளம்) மேடு பள்ளம் தானே? எல்லாம் மேடு பள்ளமே. அதை சமமாக்க வேண்டும். அவ்வளவு தானே?

ஆக்கினை போச்சு.


ஸ்ரீ ஸ்வாமி ஜீ:- (சிரித்துக் கொண்டே) நீங்கள் ஆக்கி விடுவீர்கள். ஆக்கி விடுங்கள்.

பைத்தியம்:- ஆக்கத்தானே வந்திருக்கிறது. சீக்கிரம் ஆக்கி விடுவோம்.

அன்பர்கள் அனைவரும், பலமாக சிரித்து விட்டனர்.

ஆனந்தாஸ்ரம ஒரு அன்பர்! சற்று ரகசியமாக ஸ்ரீ ஸ்வாமி ஜீயிடம் கேட்டார்.

ஸ்ரீ ஸ்வாமிஜீ வாக்கியம்




ஸ்ரீ மஹான்கள் என்ன (5)
சொன்னால், ஓர் ஆகும்
கருணையின் நீரோட்டம்.
அவர்கள் நம் நடுவே
கண்டு, நம்மை நோக்கி
வரும் போது, நம் புலனை,
நாம் அடக்கிக் கொண்டால்
அக்கருணை பிரவாகம், நமக்கு
கிட்டாது விலகிவிடும். தொடரும்.

ஸ்ரீ அன்பர் :— ஸ்வாமிஜீ! இன்று தாங்கள்! மௌன விரதமாயிற்றே? இவரிடம் பேசி விட்டீர்களே?

ஸ்ரீ ஸ்வாமிஜீ :— ஐயா! மௌனம் என்பது; எங்கு காக்க வேண்டும்? எப்படி காக்க வேண்டும்? என்ற விதி முறை இருக்கிறது. ஸ்ரீ மஹான்களை, தரிசிக்கும் போதும்; அவர்கள் சந்நிதியிலும்; மௌனத்தை, கலைத்தே ஆக வேண்டும். அங்கு நாம் மௌனம் காத்தால், அது அபசாரம் ஆகும்.

அன்று ஒரு நாள், (முதல் நாள்) நடந்த உரையாடலிலேயே, நம் ஸ்ரீ ஸ்வாமிஜீயின்! அன்பும்! அறிவும்! எப்படி இருக்கிறது என உணர்ந்து கொண்டோம். ஓர் ஐந்து தினங்களில், ஊருக்கு புறப்பட்டோம். வழி அனுப்பிய ஸ்ரீ ஸ்வாமிஜீ கேட்டார்?





நாம் நம் கட்டும் (6)
பாட்டை அவர்
களிடம், தாக்கி
நின்றால், அப்பிறவா
கம், நம்மூர் நாமே
நிறையும். மேலும்,
வாக்கில் மௌனம் போதும்.
செய்கையில் நிலைகண்டு, மௌனம் போதும்.
ஸ்ரீமஹான் களிடம் மௌனம் வேண்டாம்.
[illegible]

ஸ்ரீ ஸ்வாமி ஜீ :- அடிக்கொருமுறை, வாருங்கள் ஸ்வாமி! சீக்கிரம் வாருங்கள்! நிறைய நாள் இருங்கள். அடுத்து எப்போ வருவீர்களோ?

வைத்தியம் :- அவன் அனுப்பினால் வரும்! அவன் அனுப்பும் போது வரும்!

இந்த ஏழை சொன்ன வார்த்தையை கிரஹித்தார். ஆனால், அதன் உள் அர்த்தத்தை, அவரால் முடியவில்லை (→ உணர) போலும்? (உள் ஆழ்ந்தார்)


இந்த ஏழை வைத்தியமும், இரண்டு மூன்று முறை, வந்து போயிருக்கலாம். ஓர் முறை, இந்த ஏழை வராமல், மணி என்ற அன்பருடன், ஐந்து அன்பர்களை மட்டும், அனுப்பி வைத்தோம்.

குறிப்பு :- ஒவ்வொருமுறையும், இந்த ஏழையிடம், தனிமையில் சந்தித்து, சிவ விளக்கம் பெற்றார்.

ஸ்ரீ ஸ்வாமி ஜீ! மேலும் மேலும், உள் ஆழ்ந்தார்

ஸ்ரீ ஸ்வாமி ஜீயிடமும் இவ்வைத்தியம் அனேக விளக்கம் பெற்றது.
(அது அவர் அனுபவம் பற்றியதாகும்)





(7)

தெய்வீக நூல்
நம் வினைக்கு.
ஸ்ரீ மஹான்களின் நூல்,
நம் மனதிற்கும்
நம் ஆத்மாவுக்கும் ஆகும்.
வெளாக்கம் மறைவிக்கு. அது
அவசியம், மௌனம் வேண்டும்.

வாய் பேசாதது மௌனம் அல்ல. மிக மிக மிக,
குறைவாகவும் இறை உணர்வாகவும் பேசுவது மௌனம்
ஆகும் என்றார்கள் ஸ்ரீ ஸ்வாமிஜீ.
முடிந்தது.


மணியும் அன்பர்களுமாக, ஆறு பேர் மட்டும் வந்த அன்று, இந்த ஆறு அன்பர்களிடமும்! தம் அறையில் இருந்து கொண்டு, எம் மணியிடம், ஸ்ரீ ஸ்வாமி ஜீ உரையாடும் போது,

ஸ்ரீ ஸ்வாமிஜீ:- உன் பேர் என்ன?

மணி:- ஸ்வாமி! இதுவுடைய குலகுடும்ப நாமா! முனிரத்தினம் ஆகும். எங்க அப்பா வைத்த பேரு, மணி ஆகும். அந்த மணியே இன்று துவங்குகிறது.

ஸ்ரீ ஸ்வாமி ஜீ:- உங்க அப்பா தானே, முனிரத்தினம் என, பேர் வைத்ததாக சொல்கிறாய்? அப்படியானால், எங்கப்பா வைத்த பேரு மணி, என்கிறாயே! அது எந்த அப்பா? இது வேறு அப்பாவா?

மணி:- (சிரித்துக் கொண்டே) ஸ்வாமிஜீ! இந்த உடல் கொடுத்த அப்பா! வாடகை அப்பா தானே? அவர் வைத்த பேர் தான், முனிரத்தினம். எங்கள் ஸ்வாமிகளே! எங்கள் எல்லோருக்கும் அப்பாவாகும். அந்த உண்மையான, அப்பா வைத்த பேர் மணி ஆகும்.



ஸ்ரீபாபா ஸ்ரீமாதாஜீ!
இருவரும் இணைந்து (8)
கொடுத்த விளக்கம்.
போட்டியும்! பொறாமையும்!
கலிதோஷ குணமாகும்.
இது ஒருவனை பற்றினால்,
அவன் சாதனை பண்ண
முடியாது. இயலாது!
எல்லாம் அவன் செயல்! என அடங்கி இருந்தால்,
அந்த போட்டி பொறாமை நாசமாகும்.

ஸ்ரீஸ்வாமி ஜீ!:- அப்படியானால், உங்கள் அன்னையிடமே, இவர்தான் அம்பாவா?

மணி:- ஆமாம் ஸ்வாமி! நாங்கள் அனைவரும், அவரை, அம்பா! என்றுதான் அழைப்போம். அவரும், எவரையும், எந்த பேதமும் இல்லாமல், எல்லோரையும் குழந்தைகளாக எண்ணி, அன்பை பொழிகிறார். அவரிடம் அஹங்காரம்! அதிகாரம்! அகம்பாவம்! இல்லவே இல்லை. அன்பு! பணிவு! கனிவு! கருணை! இவைதான் உண்டு.

ஸ்ரீஸ்வாமிகள்:- (ஓர் குழந்தையென ஆகிவிட்டார். கண்களில், ஆனந்தபாஷ்பம், அருவியென கொட்டியதாம். (நம் குழந்தைகளும், கண்ணீர் விட்டனராம்) பேசமுடியாமல், நாவு தழுதழுத்தது! உள்ளம் குழைய, மணியின் இருகரங்களையும், இருகரம் பற்றிய நிலையில்)

ஸ்ரீஸ்வாமி ஜீயின் வாசகம்:- மணி! இங்கும்

ஓர் குழந்தை! அவர் அன்புக்கு



பரம்பூஜ்ய ஸ்ரீ பப்பா! (9)
அவர்கள் வாக்கியம்:-
ஹே எம் அன்பான பாபாவே!
ஓ ராம் நாமமதை
உருக்கமாகவும்! கண்ணீர்
பெருக்கமாகவும்! மன
ஏக்கமாகவும்! நீயே கதியென
நிர்க்கதியாகவும், சொன்னால் போதும்.
தொடரும்.

ஏங்கி தவிக்கிறது! எனமட்டுமே,
சொல்வாயாக, என்று ராம் எம் நாமமழை,
ஸத் ஸித் ஆனந்தா!

அன்பு! அறிவு! ஏக்கம்!
கருணை! கனிவு! பணிவு!
இவைகளின், மொத்த உருவமே, எம் கண்மணியான,
ஸத் ஸித் ஆனந்தா ஆகும்.

மாதம் ஒருமுறை, ஆனந்தாஸ்ரமம் வருவோம். ஐந்து தினங்கள் தங்குவோம்.
ஒவ்வொருமுறையும், ஆழ்ந்த கருத்துக்களை,
பகிர்ந்து கொள்வோம்.
தனிமையில் நாங்கள் இருவரும், ஸ்ரீ பப்பா &
ஸ்ரீ மாதாஜி! யின் அனுபவ வாசகங்களையும்.
உபநிஷதங்களும்! ஸ்ரீமத் ரிபுகீதையின்!
சாராம்சங்களையும்! ஒன்றுடன் ஒன்று!




(10)

காலக்கிரமத்தில்,
அந்நாமா! உன்
வினைகளை சக்தி ஹரிக்கும்.
சக்தி ஹரிக்கும் என்றால்,
கடுமை! கொடுமைகளை!
நிவர்த்தி செய்து, அனுபவ
இயல்பாக மாற்றிவிடும்.
அதனால் மனோபாரம் குறையும்.
தொடரும்.

பொருந்தியும்! தெளிவை மட்டும்;
சுவைத்து பருகுவோம். எம் ஞானக் குழந்தை!
ஸத் ஸித் ஆனந்தா! பக்தியின் சுவையை
சுவைக்க அதிக, ஆவல் கொள்வான். ஆகவே ஒரு வருஷம்
ஸ்ரீமத் பக்த விஜய கதைகளின்/ ரஸாம்ஸத்தை
பலமடங்காக, தொகுத்து அனுபவித்தேன்.
அவைகளை, இரவு பகலாக, தூக்கத்தை விரும்பாமல்
சுவைத்து, சுவைத்து அனுபவித்து தெளிவில் பெற்றான்.
எம் செல்வன் ஸத் ஸித் ஆனந்தா!
ஓர் உண்மையின் ரகஸ்யம்!

இந்த ஏழை பைத்தியத்தின்/ நடை/ உடை/
பாவனைகளையும்! பழக்க & வழக்கங்களையும்!
(பேச்சு) (செய்கை)
தம் கூர்ந்த அறிவால் கவனித்து உணர்ந்த





(11)


மழை பாரம்
குறையும்போது
தாபத்தின் வினையின்,
அழுத்தம் தாபத்தை,
பாதிக்காது ஒழியும்.
அதனால் **தாப** அவஸ்தை
நிவாரணம் ஆகும். அந் நிலை
யில், ஆத்ம ஞானப்பயிற்சி
வெகு இலகுவாக முடிந்து விடும். இது எம்
ராமன், எமக்கு சொன்ன உபதேச அமுதம் என்றார்
ஸ்ரீ பப்பா.

எம் செல்வன்! அவன் அருளால், அவன் தாள்
வணங்கி! என்ற நிலையில், **மெய் உணர்வில்** உந்தப்பட்டு, ஓர் நாள்,
இக்கேள்வியை கேட்டான்?

ஸ்ரீ ஸ்வாமிஜீ:— பாபா! ஓர் சிறிய சந்தேகம்.
அதை கேட்கலாமா?

பைத்தியம்:— தாராளமாக கேட்கலாமே?
என்ன சந்தேகம்?

ஸ்ரீ ஸ்வாமி ஜீ:— அனேக முறை, எப்போ வருவீர்கள்?
என்றே! கூடிய சீக்கிரம் வாருங்கள் என்றே?
உங்கள் வரவை, ஆவலுடன் எதிர்பார்க்கிறோம் என்றே,
கூறும் போது எல்லாம், தாங்களிடம் ஒரே பதில்
தான் வரும். அப்பதிலாவது :- **அவன்**
**அனுப்பினால் வரும்** அல்லது வருவோம்.
இதில் தான் சந்தேகம்.



அதுவாக (12)

என்றும், இந்த ஜடம் வெளிக்கவனம் இல்லை

தெய்வீக அறிவு உண்டு.

இவ்வறிவு உங்களிடம் உறையாமல் போகுமட்டும் பயன்படுத்தப்படுவதாகும்

மற்றையகாலங்களில் யாம்

பேரானவாகவே இருப்போம். தொடரும்.

ஸ்ரீஸ்வாமிஜீ:— அவன் என்றால் எவன்?

எம் மெய்யுணர்வில் ஸ்ரீபப்பா மகாராஜீ!யின், றையும்,

பரிபூரண கிருபையாலும். உங்கள் ஆசியாலும்,

தாங்கள் யார்? என உணர்ந்து கொண்டோம்.

அவனே தாங்களாய்! தாங்களே அவனாய்!!


இருக்க, யார் யாரிடம் அனுமதி கேட்பது?

யார் யாரை அனுப்புவது? இக்கேள்வியை கேட்டதும்

(அந்த பைத்தியம்! சில நிமிஷங்கள், பலமாக சிரித்துவிட்டது. பின் அதுவாக இருந்து பதில் வந்தது.)

பைத்தியம்:— இது நல்ல கேள்வியே! இதை உணரவும். (இது பரமரகஸ்யம்) இவ்விஷயம்!

நாம ரூப ஜக ஜீவ தோற்ற கற்பனையின் மனம் இறந்த (மனதிறந்தான) நிலையில் தான், சாத்தியமாகும்.



பேரறிவு என்பது, அகண்டாகார பாவனை என்ற பரசொரூப நிலையாகும். அது செயலற்ற, ஓர் அசைவற்ற நிலையாகும். பேரறிவில் ஸ்திரமாக இருந்து கொண்டு அறிவின் பாவனையால், விளக்கம் தரலாம்.

இதுவே எம்மை, அதுவென சொல்லவும், நிலையாகவும் முடிந்தது.

(13)

மனம் இறந்த நிலையே, நாம் அறிவான நிலையாகும்.

நாம் அறிவான நிலையே, நாமே ஸ்ரீ பகவான் என ஆன நிலையாகும்! இந் நிலையில் அவனும் யாமும் ஒன்றே

இனி விஷயத்திற்கு வருவோம்?

இந்த ஏழை வைத்தியத்தை, (தொடக்கத்தை)
என் இல்லம் வர வேண்டும்! என் ஊர் வர வேண்டும்!
என அழைக்கும் போது, அவன் அழைப்பில் வருமாறு,
இவ் வைத்தியம், சொல்கிறது ஏன் என்றால்?
இதன் உண்மை?

உன்னுடைய எதிர்பார்ப்பு என்ன?

நான்! வருகிறேன் என்றோ, வரவில்லை என்றோ, } பதில் எதிர்பார்க்கிறீர்கள். அவ்வளவுதானே!


இங்கு நான்! இறந்து, பல காலமாகிவிட்டது.
ஆகவே இங்கு, நான் வருகிறேன் என்றே!



உ

பரம் பூஜ்ய பப்பாவும்! (14)
" " மாதாஜியும்!
இணைந்து சொன்ன வாசகம்:—
உடல்! உறவு! பாசப்பிணைப்
பின்! நிலை அனைத்தும், உன்
புண்ணிய பாவ! பிணைப்பாகும்.
ஸ்ரீபகவானிடம் வேண்டும்போது,
அதுவேண்டும்! இது வேண்டும்!
என்றோ, அல்லது, அதுவேண்டாம்! இதுவேண்டாம்!
என்றோ, தொடரும்

நான் வரவில்லை என்றோ, சொல்ல இடம் இல்லை.
இங்கு **யாமும்! அவனும்!** ஒன்றான,
நிலையினால், இவ்வினை உடல்! அவன் கை, கருவி
(ஓர்பதுமையென்)
ஆகிவிட்டது.
மேலும் யாம், **பரநிலையை!** அவனோடு,
யாமும் இணைந்து, அதுவாகி விட்டமையால்,
அதுவும் & யாமும்! செயலற்றவர்கள். ஆனால் அவனே
செயலாற்றுவன். ஆகவே, இவ்வினை உடலுக்கு,
அவனே பொறுப்பாகிறான். அப்படியானால்,
இவ்வுடல் அனுபவிப்பதும்! அனுபவியாததும்!
**அவன்** இயக்கம் தானே? ஆகவே,
அவன் அனுமதியால், வரும் (தூலம்)
என்பது, ஸத்திய வாசகமே.
இதை எம் தேகம்! ஏற்றுக் கொண்டது.



கஷ்டத்தை போக்கு! (15)
கவலையை நீக்கு!
துன்ப துயரங்களை போக்கு!
என்று, தவசிரமங்களுக்கு
மனம் உருகி வேண்டாதே.
அது உன் வினைவடிவின்,
சம்பந்தம் கொண்ட பிராரப்தம்
ஆகும். அது நிவாரணம் ஆகாது! தொடரும்
தொடரும்

ஓர் சமயம், எம் குழந்தையிடம், தனியாக உரையாடும் போது, நடந்த ஓர் சம்பவம்?

வைத்தியம் :- ஓ ஸ்வாமிஜி! இந்த ஏழை வைத்தியத்தின்! ஓர் எளிமையான, விண்ணப்பம் அதை, தாங்கள் செவிசாய்க்க வேண்டும்?

ஸ்ரீஸ்வாமிஜி :- என்ன பாபா! பீடிகை பலமாக இருக்கிறது? என்ன விஷயம்?

வைத்தியம் :- இவ் வைத்தியமோ, ஸ்ரீபாத தாஸன்! எமக்கு பாதமே கதி! எம் இருப்பிடம் ஸ்ரீபாதமும்! ஸ்ரீபாதுகையும் தான். ஆகவே மறுபிறப்பு உண்டாமெனில், இவ்வேழை வரும் சமயமெல்லாம் **பாதசேவை** தந்தருள வேணுமென்று மிகவும் பணிந்து வேண்டுகிறேன்!

ஸ்ரீஸ்வாமிஜி :- (சற்று ஆழ்ந்து சிந்தித்தார்.)
அப்படியானால், பாபா!
எமக்கும், யாம் விரும்பும் ஒன்றை தந்தருள வேண்டும் சம்மதமா?

வைத்தியம் :- கேளுங்கள் தாராளமாக. அவசியம் கிடைக்கும்.



(16)

ஆனால்
ஹே பிரபோ!
ஹே தீனதயாளு!
ஹே தீனபந்தோ!
ஹே அனாத ரக்ஷகா!
எமக்கு உடல் உலக
சம்பந்த எதுவானாலும்
வேண்டவே வேண்டாம்.

அதாவது போக போக்கியம் எதுவும் வேண்டாம்
வறுமையோ! பிணியோ! துன்ப துயரமோ! தொடரும்.

ஸ்ரீஸ்வாமிஜீ:- உம்மை ஸ்ரீபரமாத்மாவாக!
பாவனை செய்யும் நிலையில், உம் கை குழல்

(A) கண்ணன் கையில் உள்ளது, புல்லாங்குழல்.
கண்ணன் மாயாவினால், (அக்குழலினால்) விளையாடும் குழந்தை.

(B) பரமாத்மா கையில் உள்ளது, ஞானக் குழல்.
பரமாத்மா சாதகர்களை, தட்டி வினையை போக்குபவன்.
புல்லாங்குழலில் ஓட்டை உண்டு. ஞானக்குழல் (ஓட்டையில்லாதது) புனிதமானது
இதை ஸ்ரீமஹான்கள், வாயிலாக கேள்விப்படுகிறோம்.

அது **ஞானகுழல்** ஆகும்.

ஆகவே, அந்த ஞானக்குழலால், எம் தலையில்,
எத்தனை முறையானாலும், அடிக்கலாம் (தட்டலாம்)
அதற்கு, உமக்கு (மட்டும்) உரிமை உண்டு. அது எம் பாக்கியம்.
இருவரும், இப்படி ஒருவருக்கு ஒருவர், நிலைகளை,
பகிர்ந்து கொண்டோம்.





அது எம்முடைய தூல
உடலோடு பிணைக்கப்
பட்டிருக்கும். அவைகளே,
விலக்க வேண்டாம். அவை
தாக்கும் உள்ளத்திற்கு,
தாங்கும் பக்குவத்தை மட்டும்
கொடு. வலிமையை கொடு. ஆனால் இது வேண்டும்.
அதாவது
தொடரும்.

அன்று முதல் எம் குழந்தையின் பாக்கியத்தால்
இந்நாளை வைத்தியத்திற்கு **ஸ்ரீபாதசேவை**யும்,
எம் குழந்தையையும் சேர்த்து ஆனந்தாஸ்ரம,
**பக்குவ** குழந்தைகளுக்கு, ஞானக் குழுவின்,
**ஸ்பரிச** தீட்சையும் கிடைத்தது.
அந்த ஞானக் குழுவும், ஆனந்தாஸ்ரமத்தில் மட்டும்
விளையாடும். வேறு எங்கும் விளையாடுவதில்லை.
முடிவு.

ஞானபாடத்தில்

மூன்று வருடங்களில், எம் குழந்தையின், ஞான
அனுபவ பாடம்! முற்றும் பெற்றது போதும்?
**வினா! விதி! மனம்!** இம் மூன்றும்
நிறைவு பெற்றது. ஆகவே உடல் நலிவு ஏற்பட்டது.
உடல் சிரமம், அவன்! உள்ளத்தை பாதிக்கவில்லை.
பாதிக்கவில்லை என்று சொல்வதை விட மனம்
மறைந்தாகிக் கொண்டிருக்கிறது என்றே சொல்ல வேண்டும்.



உன் காட்சி வேண்டும் (18)
உன் பாத தரிசனம்
வேண்டும். உன்னோடு கலந்து
மயமாக வேண்டும். ஆக,
மொத்தத்தில் நீ ஒருவ
னே மட்டும் வேண்டும்
என வேண்டி கதறி அழுதால் அவன் கிருபையினால் நாமரூப
உடல் உலகம் மறையும். அவன் பிரத்தியட்சமாவான்.
முழுதும்.

ஒருமுறை எம் குழந்தையை தனியே சந்தித்த
போது, அவன் சொன்ன வாய்மொழி!

ஹே பாபாஜீ! யாம் வந்த காரியம், நிறைவு

பெற்றதாக, உணர்கிறோம். அது தாங்கள் அறிந்ததே.

தாங்களுடைய பதில் என்ன? என்ற
குழந்தாய்! வாஸ்தவம் மஹாத்மா.

நீயும் அறியாததொன்றில்லை. ஆனால் நம்மவர்!
அறியாது போவர், நடிப்பதில், அது ஓர் பெரிய
காரியமல்ல. அது மாயாவின் காரியமே.

ஆனால், உன்னை எவரும் அறியார். நம்முடைய
ஸ்ரீ பாபா மகாதாஜியைத் தவிர, என உணர்.

மேலும் ஓர் உண்மை, எப்படி இருக்கிறது என்றால்?
இது கலியுகத்தின், கோர தாண்டவ காலமாகும்.



ஸ்ரீமஹான்களின் தாவக் **காட்சியில்!** (19)

மனம் பக்குவமாகும்.

**சேவையில்!**

ஹீந பக்குவப்படும்.

இவ்வாறாக, காலக்கிரமத்தில்

ஞானபக்குவம், வழி

ஞானியின் தாவ வருத்துக் கொள்ளும். என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

**சேவை**யினாலும்! **தரிசனம்!**

ஒன்றாலும், பலரை பக்குவப்படுத்த முடியும்!

சிலரை கடைத்தேறவும் முடியும்! என,

ஸ்ரீமஹான்கள் சொல்வர். அவ்வழியில்,

இன்னமும் சில காலம்; உன் தாவமானது,

அனேகர் **பாபம்** நீக்கமாக,

நலிந்து கெட்டு நசுங்குவதைப் போல்,

ஓர் **காட்சி**ப்பொருளாக இருக்க வேண்டும்.


**சிலர்** சேவையினால் உய்வடைவர்.

**பலர்** தரிசனத்தால் உய்வடைவர்

இவ் உன், **பொறுமை**! ஓர்பாடமாக,

அனைவர்க்கும் அமையும் எனமுடிக்கிறோம்.





உங்கள் விஞ்ஞான வைத்தியத்தை ஸ்ரீ ஸ்வாமி ஜீ அவர்களால்! உங்களுக்கு இயல வில்லை. அதன் காரணம்? அவர் அறிவு சொரூபம். நீயோ புத்தி சொரூபம். புத்தி என்றால், விகாரம் விவகாரம். அறிவு என்றால், சாட்சி! அமைதி! பொறுமை! நிதானம்! ஆனந்தம்! ஆகும்.

(20)

ஒருமுறை வந்திருந்த போது, இவ் வைத்தியம்! சொன்னது:- குழந்தாய்! இந்த ஆனந்தாஸ்ரமம்! யாம் வந்த காரியம்! முடிந்து விட்டது. இது நீ அறிந்ததே! ஸ்ரீ ஸ்வாமி ஜீ:- ஆமாம் பாபா ஜீ! சூழ்நிலைகள் மாறி வருவதால், தாங்களாலும், இங்கு வர முடியாது தான். ஆனால் இத்தா வம்மறையுமுன், ஓரிரு முறையாவது, தாங்கள் தரிசனபாக்கியம் வேண்டும் என, அக்குழந்தை கண்ணீர் விட்டது. வைத்தியம்:- எமதய்யன் கிருஷ்ணன் (கண்ணன்) கருணையால், இன்னமும்! இருமுறை நம் சந்திப்பு நடைபெறும். அது இங்கு அல்ல. வெளியிடங்களில், அவசியம் அமையும். இந்த ரூட வைத்தியம், சொன்னது போல், எமதய்யன் கிருஷ்ணன் (கண்ணன்) கருணையால், ஹைதராபாத்தில்! ஓர் டாக்டர் இல்லத்திலும்.



உடல் உலக நாமரூப
பிணைப்பு உள்ள (21)
உறவு, சுற்றம், நட்பு,
இவைகளுக்கு, விஞ்ஞான
வைத்தியம், தேவை.
அதுவும் அஞ்ஞானமே.
சாதனை முயற்சியால், இருக்கும்

கஷ்டப்பட்டவர்களுக்கு ஞான வைத்தியம் தேவை
இல்லை. அதுவே அவர்களுக்கு, நீங்கள் செய்யும் சேவை
யாகும்.

பூஜையில், ஓர் நதிக்கரை, இல்லத்திலும்,
சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அத்துடன்
**தூலமாக,** சந்திப்பது நிறைவு பெற்றது.
**சூட்சுமமாக,** இருமுறை தரிசனபாக்கியம்,
நடந்தது அவன் கருணையால்.

அது சமயம் ஓர் நாள்.

வைத்தியம் :- குழந்தாய் நலமா?

ஸ்ரீஸ்வாமி ஜீ :- ஹே அன்பான பாபாஜீ எல்லாம் நலமே!

வைத்தியம் :- பிணக்கூடு என்ன செய்கிறது?

ஸ்ரீஸ்வாமிஜீ :- அது வெறும் ஜடம் தானே பாபா?
அது செய்வதற்கு என்ன இருக்கிறது. ஆனால்,
மனம் வசம், மாட்டிக்கொண்ட மாந்தர் **மனதை**
தம் வசப் படுத்த, இயலாத் தன்மையால்,



(22)

ஸ்ரீஸ்வாமி ஜீ! சொன்ன, கடைசி வாசகம்:– சாதனையில் முற்றுப் பெற்ற ஸ்ரீமஹான்களை, அத்தவம், இனியும் வேண்டும் என்ற, எண்ணத்தை விட்டு விட்டு. அத்தவம் இனியும், கசங்காமல்! கசக்காமல்!!

உ நோயு இல்லாமல்; தொடரும்.

ஸ்ரீஸ்வாமிஜீ:– அவர்கள், மனம் போன போக்கில், எவ்வாம் மனதை அலையவிட்டு. விஞ்ஞான நிலையில், வைத்தியம் பார்க்கின்றனர். அவர்களின் சொல்லிருந்தமில்லை. (அதுகளி தோஷமாகும்)

இதில், ஓர் வேடிக்கை என்னவென்றால் பாபா!!

கனிந்த கனியை/ காய் என ஆக! கடும் முயற்சி செய்கின்றனர். (அறியாமையின், அன்பர்களும்! டாக்டர்களும்!)

கனி மரத்தை விட்டு, இறங்கட்டும் என. (அதாவது இத்தனை காலமாக சாதனை செய்து, முற்றுப் பெற்ற தாவம்/ சிரமம் இல்லாமல், மறையட்டும் என) வேண்டாமல்.

அப்பழுத்த பழத்தை காயத்தை



எந்த துன்பமும் இல்லாமல் மறைய வேண்டும்; (23)

என பிரார்த்தனை பண்ண வேண்டும். ஓர் அளவுக்கு மேல்

அந்தாவத்திற்கு

உ

**சிரம வைத்தியம்!** செய்யாமல் இருப்பது தர்மமாகும். தொடரும்.

குத்தி குத்தி! குத்தி குத்தி! குத்தி குத்தி!

குத்தி குத்தி! குத்தி குத்தி! குத்தி குத்தி!

**காயாக மாற்று!** அதாவது,

தாவசஞ்சாரமும் & ஸத் ஸங்க உரையாடலும்!

தரவேண்டும் என்றும். நாம் பெற வேண்டும் என்றும்,

**கடும் முயற்சி** செய்கின்றனர் யாவரும்.

பாடுபட்டு, களைத்து ஓய்ந்த தாலவம். இனியாவது,

அமைதியாக, ஹரி துயில், எழட்டும் என,

"ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெய ராம், ஓம்"!

மட்டும், ஸ்மரித்துக் கொண்டிருந்தால்,

அவர்களும், ஆனந்தம் அடைவர். அங்கு **யாமும்**

**ஆனந்தம் அடைவோம்!**



உ

(௨௪)

ஓர் குறிப்பிட்ட, வயதை அடைந்து விட்டால், அவ்வுடலுக்கு வைத்தியத்தை ஏற்கும் ரக்தி இராது, என்பது வைத்தியம்.

அது சமயம் ஸ்ரீ பகவன் நாம ஜபம்! கீர்த்தனைதான்! அவ்வமான, இதமான, ஆனந்தமான மருந்தாகும். முடிந்தவும்.

கவனக்குறைவு என்ற அஞ்ஞானம்! அறியாமை அவர்களை, இந்த பாடுபடுத்துகிறது.

எம்மிடம், மனம் இருந்தால், யாம் இது பற்றி, கேட்க முடியும். உம் கருணையினால், மாயாவை மறைத்தாகி! அறிவாகி! விட்டமையால், உம் போன்று, யாமும் சாட்சி நிலையே.

அவர்கள், கவனக்குறைவை பார்த்து, அனுதாபம் தான், கொள்ள முடியும். வேறென்ன செய்ய முடியும்??

வைத்தியம்: ஞான, விவேக, வைராக்கிய, குழந்தாய்! உன்னை யாம் உணர்வோம்! எம்மை நீ உணர்வாய்! நம்மை! மனம் வசம் கொண்டோர், எவராயினும், காணவும்! உணரவும்! முடியாது என்பதே, வைத்தியம்.



(25)

ஓர் நிலையில், பக்குவம் ஆன நிலையில், அவர்கள்! உடல் மறந்து இருப்பதால் உங்கள் வைத்தியம், அவர்களை சிரமப்படுத்துவதாகத்தான் அமையுமே அன்றி, சிரம நிவர்த்தி ஆகாது, என எம் குழந்தையான உங்கள் ஸ்ரீ ஸ்வாமி ஜீயும் உரையை முடித்துக் கொண்டார்.

வைத்தியம் :- எம் ஞானப்புதல்வா!
ஒன்றை மட்டும் கூறிவிட்டு, நம்மை
நிறைவு செய்து கொள்வோம்.
வரும் புரட்டாசி மாதம்! நவராத்திரியின்,
கடைசி தினமாகிய, விஜயதசமி!
முடிந்த, சில தினங்களில், உன் தவத்தை விட,
இறை, பர, குரு, கருணை!
அனுமதி அளித்திருக்கிறது, என மட்டும் உணர்.
அன்பர்களுக்கு
எண்ணம்! சொல்! செயல்! நாம் அடங்கி
பிறரை எக்காரணம் கொண்டும் அடக்காமல்
அவன் ஆகிய மேனியில், அன்பை வளர்த்து,
அவனே நாமாகி! நாமே அதுவாகி! மனம் மறந்தால்,
அறிவே (ஆத்மாவே) நாம் ஆவோம்.
அது ஆகவாம் என இதை நிறைவு செய்கிறேன்.

பாபா.



(26)

கீழே கூறிய

மூவரும்!

அவதாரபுருஷர்களே.

நம் நிலையில் அவர்களை,
வைத்து பார்க்கவாகாது.
ஆனால்? அவர்கள் நிலையில்
நம்மை உயர்த்த வேண்டும். அது அவசியம் முடியும்.
அதன் வழி பணிவே பாதையாக, தொண்டுகள்
உதவியால் முடியும்.

ஓர் ஸத்திய உணர்வு!

பரம் பூஜ்ய ஸ்ரீபப்பாஜியும்!

பரம் பூஜ்ய ஸ்ரீகிருஷ்ணபாய்!

மாதாஜியும்! பரம் பூஜ்ய ஸ்ரீ

ஸத் ஸித் ஆனந்தாஜியும்!

இவை எல்லாம்!

காலம்! தேசம்! வர்த்தமானம்! மனம்! வாக்கு! காயம்!
நாமம்! ரூபம்! குணம்! குறை! ஆகிய இந்த பந்தமும்
கடந்த பரப்பிரம்மமாகிய, **அதுவாகவே!**
இருக்கிறார்கள்! நாமும் அதுவே! அதுவே நாம்! என்பதே
ஸத்திய உணர்வாகும். இதன் பெருந்தடையென்பது

**மனமேயாகும்.**

இருப்பது ஒன்றே! நடப்பது நலமே.
எல்லாம் ஒன்றே!

பாபா.

அதுவே நாம்! நாமே அது! அதுவே நீங்கள்! இது ஸத்தியம்.




# அன்பின் குடில்
# Anbin Kudil